வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# வெட்டுடையாள் காளியம்மனின் வரலாறும் முரண்பாடுகளும்

த.ராஜி
முதுகலை தமிழ் இரண்டாம் ஆண்டு
மன்னர் துரைசிங்கம் அரசு கலை கல்லூரி
சிவகங்கை.

ஆய்வுச்சுருக்கம்

வெட்டுடையாள் காளியம்மன் கோவில் சிவகங்கை மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற இந்து அறநிலையத்தறையின் கீழ் இயங்கும் கோவிலாகும். இங்கு காணப்படும் பெண் தெய்வம் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக இவ்வட்டார மக்களால் பார்க்கப்படுகிறது. காசு வெட்டிப்போடல் என்னும் வேண்டுதல் பண்பு அரசாங்க அனுமதியுடன் இங்கு மேற்கொள்ளப்படுகிறது. இதனால் இப்பகுதி மக்கள் தவறிழைக்கும் பாங்கையும் சற்று குறைவாகவே காணமுடிகிறது. 'உடையாள்' பற்றிய சிவகங்கை அரண்மனை வரலாறு இராணி வேலுநாச்சியாரின் வரலாற்றோடு இணைந்துள்ளது. இணைந்துள்ளது. இணையத்திலும் கோவில் சார்ந்த தல வரலாறு எனும் நூலிலும் கூறப்படும் வரலாறு பெருந்தெய்வத்திற்கான பணிபை பெற்றுள்ளது. இத்தன்மை சிறு தெய்வங்களை மேல்நிலையாக்கம் எனும் பாங்கை ஒத்துள்ளது.

கலைச்சொற்கள்

வெட்டுடையாள், காசுவெட்டிப்போடல், கொடிமரம், மேல்நிலையாக்கம், காரைச்செடி, ஈச்சமரம், சங்காபிஷேகம், கண்மாய்க்கரை, ஊர் மந்தை.

## முன்னுரை

சிவகங்கை மாவட்டத்தின் தொண்டிச் சாலையில் சுமார் 13 கிலோமீட்டர் தொலைவில் கொல்லங்குடி என்னும் கிரமம் உள்ளது. அக்கிராமத்தின் தெற்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அரியாக்குறிச்சி என்னும் காளியம்மன் கோவில் அமைங்துள்ளது. கோவிலில் உள்ள அம்மன் காட்டுப்பகுதியும் வயல்வெளிகளும்

சூழ்ந்த இடத்தில் வீற்றிருந்து மக்களுக்கு நல்லருள் பாலிக்கிறாள். அம்மன் பற்றிய வரலாறு எவ்வாறு மேட்டிமையாக்கப்பட்டுள்ளது என்பதையும் மக்களிடையே வழங்கி வரும் பழமரபுக் கதையையும் ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

வழிபாட்டின் தோற்றப் பின்னணி

நாட்டார் தெய்வ வழிபாடுகளில் காத்து, கருப்பு என்று கூறப்படும் காற்று, இருள் மீதான பயம்தான் தெய்வ வழிபாட்டின் முன்னோடியாக இருந்திருக்கலாம். "பிற்காலத்தில் இந்தக் கோரக் கடவுள்களின் பெயரைத் தங்கள் வாரிசுகளுக்குச் சூட்டினால் அக்கடவுளால் ஆபத்து நேராது என்று கருதினர். காற்றுக்கடவுளைத் திருப்திபடுத்த காத்தாயி, காத்தப்பன், காத்தவராயன், காத்தவீரி என்று தங்கள் பிள்ளைக்குப் பெயர் சூட்டினர். இருள் கடவுளைத் திருப்திபடுத்த கருப்பன், கருப்பாயி, கருப்புச்சாமி, இருளன், இருளாயி என்று தங்கள் வாரிசுகளுக்குக்ப் பெயர் சூட்டினர். அது இன்று வரை மரபாகத் தொடர்கிறது.1

தாய்த் தெய்வ வழிபாடு

தாய்த் தெய்வ வழிபாடே பழமரபுக் கதைகளில் காணலாகும் நாட்டார் தெய்வ வழிபாடு ஆகும்.

"வழிபாட்டு முறைகளில் பொங்கலும் முளைப்பாரியும் சாமியாட்டமும் இரத்தப்பலியும் தாய்த் தெய்வத்தை அடையாளம் காட்டும் தனிக்கூறுகளாகும். அன்மைக் காலமாகத் திருவிழா நாட்களில் மட்டும் தாய்த் தெய்வத்தை வைதிகப்படுத்தும் பார்ப்பனர்கள் பூசை செய்கின்றனர். ஏனைய நாட்களில் தாய்த் தெய்வத்திற்கான பூசை, பார்ப்பனர் அல்லாத சாதியாராலேயே செய்யப்படுகின்றது." என்பதன் மூலம், நாட்டார் தெய்வங்களான தாய்த்தெய்வகங்களைப் பெருந்தெய்வ வழிபாட்டிற்குள் கொண்டு வந்து செல்வதற்கான வழியை தொ.பரமசிவன் அவர்களின் கருத்தின் வழி அறிய முடிகின்றது.

வெட்டுடையாள் கோவிலின் அமைப்பு

காளி கோவிலின் சிறிய ராஜ கோபுரத்துக்குள் நுழைந்ததும் இருபுறத்துத் தூண்களில் விநாயகரும் முருகக்கடவுளும் வீற்றிருக்கின்றனர். கோபுரத்தின் நேர் எதிர் திசையில் கிழக்கு நோக்கி வெட்டுடையார் ஐய்யனார் சந்நதி அமைந்துள்ளது. இச்சந்நதியின் தனித்தன்மையானது யாதெனில் பொதுவாகவே ஐய்யனாருடைய தலையில் சடைமுடி

இருக்கும். ஆனால் இங்குள்ள ஐய்யனாரின் தலைமுடி சுவாலா முடி என்று கூறப்படும் வகையில் நெருப்புச் சுடரொளி வீசிக் காட்சியளிக்கிறது.

ஐய்யனாருக்கு எதிர்ப்பக்கம் சற்று தள்ளி மேற்கு பார்த்த முகமாக அம்பிகை வலது காலை மடித்து அமர்ந்து எட்டு கைகளுடன் காலுக்கு கீழே அசுரனை வதம் செய்வது போல் காட்சி தருகிறாள். இச்சந்நதியின் நேர் எதிர் திசையில் தல விருட்சமான ஈச்ச மரங்கள் காணப்படுகின்றன. மேலும் அம்பிகை சந்நதியின் எதிர் திசையில் தென்மேற்கு மூலையில் வடக்கு முகமாக ஆஞ்சநேயர், சோலைமலை சாமி, கல்யாணம் மீனாட்சி சுந்தரேஸ்வரர், கொங்கையாத்தேவர் சிலை, அதற்கருகில் வீரமான தோற்றத்துடனான கருப்பண்ணசாமியும், கிழக்கு முகமாக ஸ்ரீ வீரப்பசுவாமி, ஸ்ரீ வீரபத்திரன் சுவாமி, ஸ்ரீ முனியப்ப சுவாமி, பேச்சியம்மன், ஸ்ரீ சூலக்காட்டு காளியம்மன், ஸ்ரீ முனீஸ்வரர் பீடம், ஸ்ரீ பைரவர் முதலான தெய்வங்களும் கோவிலில் தெய்வங்களாக உள்ளனர். மேலும் கோவிலின் வெளியில் இடப்பக்கத்தில் சோனைக் கருப்பண்ணசாமி காவல் தெய்வமாக உள்ளார். அச்சந்நதியின் கருப்ப வேளார், காரி வேளார் மண்சுதை தெய்வமும் உள்ளது.

திருவிழாக்கள்

1940, 1977, 2007 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இக்கோவிலில் ‘குடமுழுக்கு’ நடைபெற்றுள்ளது. பங்குனியில் பிரம்மோற்சவம், ஆடி 18 இல் பூச்சொரிதல் விழா, கந்த சஷ்டி, மார்கழி மாத திருப்பள்ளி எழுச்சி, பௌர்ணமி வழிபாடு, தைப்பொங்கல், ஆடி மாதமும், தை மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை 108 விளக்கு பூசை, ஆண்டுதோறும் லெட்சார்ச்சனை, சிவராத்திரி மற்றும் நவராத்திரி வழிபாடு என்று பல்வேறு விழாக்கள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் பங்குனி மாதத்தில் இங்கு பத்து நாட்கள் விழா நடைபெறுகின்றது. இவ்விழாவின்போது சிவனைப் போலவே அம்பிகைக்கு 108 சங்காபிஷேகம் நடப்பது இக்கோவிலின் சிறப்பாகும். இப்பத்து நாட்களில் அம்பிகை கேடயம், பூதகி, கிளி, அன்னம், காமதேனு, காளை, சிம்மம், தங்கக் குதிரை ஆகிய வாகனங்களில் பவனி வருகிறாள். விழாவிடன் ஒன்பதாம் நாளில் தேர் பவனியும் நடக்கின்றது. ஆடிப்பெருக்கென்று அம்பாள் சன்னதி முழுவதும் பூக்கள் நிரப்பி பூச்சொரிதல் விழா என்பது மிகவும் தனித்துவமாக நடைபெறுகிறது.

வெட்டுடையார் காளியின் சிறப்பு

இக்கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்த வேண்டுதல் தலமாக சிவகங்கை மாவட்டம் வாழ்மக்களால் பார்க்கப்படுகின்றது.

- கணவனின் உயிருக்கு ஆபத்து என்றால் இக்காளியிடம் வேண்டி, வேண்டுதல் நிறைவேறிய பின் பெண்கள் தங்கள் தங்கத்தாலியை காணிக்கையாக செலுத்துகின்றனர்.
- மாங்கல்ய தோஷம் உள்ளவர்கள் மாங்கல்யத்தை அம்மனின் பாதத்தில் வைத்து வாங்கி செல்கின்றனர்.
- திருமணம் முதலிய மங்கல நிகழ்வுகளும் இக்கோவிலில் நடைபெறுகின்றன.
- குழந்தை வரம் வேண்டுவோர் இக்கோவிலின் விசிறி மரத்தில் தொட்டில் கட்டி வேண்டிக் கொள்கின்றனர்.
- இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பாக பார்க்கப்படுவது காசு வெட்டு வெட்டி போடல் மரபாகும். அதாவது கடன் வாங்கிவிட்டு திருப்பித் தராமல் அடாவடித்தனம் செய்பவர்கள், திருட்டு வேலைகளில் ஈடுபடுபவர்கள், பிறருக்குத் தொல்லை கொடுப்பவர்கள், வீண்பழி சுமத்துபவர்கள் என்று நேர்மைக்கு மாற்றாகச் செயல்படுபவர்களின் செயலை எண்ணி பாதிக்கப்பட்டவர்கள் காசு வெட்டிப் போட்டால் தீங்கிழைத்தவர்கள் மட்டுமின்றி அவர்களின் வருங்காலத் தலைமுறைகளும் தண்டனையை அனுபவிக்கின்றனர் என்பதும் இக்கோவிலின் சிறப்பாகும். காசு வெட்டிப் போடும் இச்செயல் அரசாங்கத்தின் அனுமதியின் பெயரில் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- கோவிலில் தினமும் 100 நபர்களுக்கு அன்னதானம் இன்றளவும் நடைபெறுகிறது

தல வரலாறுகளும் முரண்பாடுகளும்

இந்த இடத்தில் பல நூற்றாண்டுகளாக ஐய்யனார் கோவில் அமைந்திருந்தது. காரைச்செடி, ஈச்சமரம் ஆகியவை நிறைந்திருந்த இப்பகுதியில் பலருக்கும் தெரியாமல் மறைந்திருந்த ஐய்யனாரை வழிபட்ட குடும்பத்தில் காரி வேளார் என்பவரும் கருப்பு வேளார் என்பவரும் முறை வைத்துக் கோயில் வழிபாடுகளை நிகழ்த்தி வந்தனர். இவர்களில் காரிவேளார் கேரள நாட்டிற்குச் சென்று மாந்திரீகம் கற்று சில தேவதைகளை ஏவல் கொண்டு திரும்பி வந்தார். ஐய்யனார் சந்நதிக்கு முன் மண்ணில்

சில எழுத்துக்கள் எழுதப்பட்டு அழியாமல் இருந்ததைக் கண்டார். அந்த மந்திர எழுத்துக்கள் காளிக்கு உரியவை என அறிந்து அந்த இடத்தில் காளியை தோற்றுவித்தார். ஈச்சங்காட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பெற்ற ஐய்யனார் வெட்டி எடுக்கப்பெற்றவர் என்பதால் வெட்டுடைய ஐய்யனார் என்றும் அவருக்கருகில் நிலைபெற்ற காளியை வெட்டுடைய காளி என்றும் பெயர் பெற்றனர்.3

வழிபாட்டு முறைகளில் பொங்கலும் முளைப்பாரியும், சாமியாட்டமும் இரத்தப் பலியும் தாய்த்தெய்வத்தை அடையாளம் காட்டும் தனிக்கூறுகளாகும். அண்மைக்காலமாக திருவிழா நாட்களில் மட்டும் தாய்த் தெய்வத்தை வைதீகப்படுத்தும் பார்ப்பனர்கள் பூசை செய்கின்றனர். ஏனைய நாட்களில் தாய்த் தெய்வத்திற்கான பூசை பார்ப்பனர் அல்லாத சாதியராலேயே செய்யப்படுகின்றது என்பதின் மூலம் நாட்டார் தெய்வங்களான தாய் தெய்வங்களைப் பெருந்தெய்வ வழிபாட்டிற்குள் கொண்டு செல்வதற்கான வழியை தொ.பரமசிவன் அவர்களின் கருத்தின் வழி அறிய முடிகின்றது.

"நாட்டார் தெய்வங்கள் எவையும் 'முன்னே வந்து வரம் தரும் தெய்வங்கள் அல்ல.' 'பின்னே நின்று பாதுகாப்பு தரக்கூடியவை' அவை அழிக்கும் ஆற்றல் அற்றவை. மாறாக வயல் களத்திலும் அறுவடை காலத்திலும் கண்மாய் கரையிலும் ஊர் மந்தையிலும் ஊர் எல்லையிலும் தூங்காமல் நின்று காவல் காக்கக் கூடியன. அவை நுகர்வுக்காக மட்டும் பிறந்தவை அல்ல. உற்பத்தி சார்ந்த பண்பாட்டோடு பிறந்தவை. ஆகவே உழைக்கும் மக்களின் பாதுகாப்புத் தெய்வங்களாகத் தாய்த் தெய்வங்கள் விளங்கியிருக்கின்றன.

இவ்வாறு பல கதைகள் இக்கோவில் பற்றிக் கூறப்படுகின்றன. கொடி மரங்கள் கோவிலின் பிரதான தெய்வத்தின் முன் தான் வைக்கப்படும் அதனடிப்படையில் இக்கோவிலில் காளியம்மனின் முன்புதான் கொடிமரம் வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் காளி தெய்வம்தான் இவ்விடத்தில் முன் தோன்றியிருக்கலாம் என்ற அனுமானத்திற்கும் வர முடிகிறது.

இன்றைக்கு வெட்டுடையாள் காளியம்மன் என்னும் தல வரலாற்று நூலிலும் வெட்டுடையார் என்று இடம்பெற்றுள்ளது. இதிலும் மேல்நிலையாக்கப் பண்பையே காண முடிகிறது.

தொகுப்புரை

சிவகங்கை மாவட்டத்தில் குக் கிராமத்தில் வெட்டுடையாள் காளியம்மன் கோவில் இருந்தாலும் உலகம் முழுவதும் இக்கோவில் பற்றிய வரலாறு விரிந்தே காணப்படுகிறது.

சிறு தெய்வ, நாட்டார் தெய்வ, தாய்த் தெய்வ வழிபாட்டின் அனைத்துக் கூறுகளையும் இக்கோவில் உள்ளமைப்பு பெற்றுள்ளது.

வழிபாடுகள், வேண்டுதல்கள் என்ற பெயரில் அவ்வட்டார மக்களின் நம்பிக்கையைப் பறைசாற்றுகின்றன.

மேல்நிலையாக்கம் என்ற பெயரில் தற்போது வரலாறும் கோவிலும் நாட்டார் தெய்வ வழிபாட்டுக் கூறுகளில்லிருந்து விலகிச் சென்றுள்ளது என்பதை நேரில் பார்த்ததின் அடிப்படையில் கூற இயலுகின்றது.

முடிவுரை

ஆரியர்களின் வருகை, பக்தி, இலக்கிய வளர்ச்சி, பெருந்தெய்வ வழிபாடு என்று வரலாற்றில் தெய்வங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வுகள் தோற்றுவிக்கப்பட்டாலும் சிறு தெய்வங்களுக்கான தனித்தன்மை இன்றளவும் கிராமங்களில் நிலைத்தே நிற்கின்றது. தாய்த் தெய்வக் கோவில்கள் சார்ந்த வரலாறு பதிவாக மாறும்போது மேல்நிலையாக்கம் என்ற தன்மை வலுப்பெறுகிறது. குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்ந்த வரலாறுகள் மேல்நிலையாக்கம் ஆகும் போது அதன் தன்மை முற்றிலும் அம்மக்களின் பண்பாட்டிற்கும் வழக்காறுகளுக்கும் மாறானதாகவே பதிவேற்றம் ஆகின்றது.

துணை நூற் பட்டியல்

1. பெருமாள் எஸ்.ஏ.கடவுள் பிறந்த கதை, ப:17, 2011, பாரதி புத்தகாலயம், சென்னை.

2. பரமசிவன் தொ., தெய்வம் என்பதோர், பக்.17-18, 2006, யாதுமாகி பதிப்பகம், திருநெல்வேலி.

3. மேலது, ப: 88

4. பேராசிரியர் சுந்தரம் சொ.சொ.மீ, அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில் தல வரலாறு, பக்:5 – 6, 2017, திருக்கோயில் வெளியீடு, சிவகங்கை.